**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 20/2012   கற்பகவள்ளி (பிசா 4)  தேதி: 10.06.2026.</u>**

**<u>பிசா. 4 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 10ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

இந்த வழக்கில் எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பி.சா.ஆ.7, பி.சா.ஆ.8, பி.சா.ஆ.9, பி.சா.ஆ.10, பி.சா.ஆ.12 ஆவணங்களை பற்றி எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான், எனது தாயார், எனது பாட்டி, எனது சகோதரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும் மேற்படி ஆவணங்களை பற்றி எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான், எனது தாயார், எனது பாட்டி, எனது சகோதரர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும் மேற்படி ஆவணங்களை பற்றி எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். OS No. 47/2015 வழக்கிலும் எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும் மேற்படி ஆவணங்களை பற்றி எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றாலும், அந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும் மேற்படி ஆவணங்களை குறித்து எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.7, பி.சா.ஆ.8, பி.சா.ஆ.9, பி.சா.ஆ.10, பி.சா.ஆ.12, பி.சா.ஆ.14 ஆவணங்கள் OS No. 47/2015 வழக்கில் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை பொறுத்து அந்த வழக்கில் எங்கள் தரப்பிலோ எனது தந்தை தரப்பிலோ கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுபாநாயக்கர் என்பவர் காமாட்சி செட்டியாரிடம் இருந்து

வாய்மொழியாக சொத்தை கிரையம் பெற்றார், அந்த வாய்மொழி கிரையத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காமாட்சி செட்டியாரிடம் இருந்து சுபாநாயக்கர் வாய்மொழியாக கிரையம் வாங்கியதாக கூறுவது தவறு என்றாலும், அந்த வாய்மொழி கிரையத்தின் அடிப்படையில் சுபா நாயக்கரின் மகன் என்று கூறப்படும் அய்யப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவத்து வந்ததாகவும் அதன் பெயரில் அய்யப்ப நாயாக்கர் எனது தந்தைக்கு கிரையம் கொடுத்ததாக கூறும் சங்கதியும் பொய்யானவை என்றால் சரியல்ல. அய்யப்ப நாயக்கர் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்துள்ளேன்,. தீர்வை ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். OS No. 47/2015 வழக்கில் என் தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் எனது தந்தையின் கிரையதாரர் அய்யப்ப நாயக்கருக்கு சிறந்த எதிரிடை அனுபவம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அய்யப்ப நாயக்கருக்கு தொடர்ந்து 30 வருடங்களுங்கு மேலாக அனுபவம் செய்து வந்த நிலையில், எனது தந்தை அவரிடம் இருந்து கிரையம் வாங்கினார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** 10ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.